தனியான விடைப் புத்தகத்தினை உபயோகிப்பதுடன் பாடத்தின் பெயரினை வியாபாரச் சட்டம் என எழுதுக.

முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கைக் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

**இடைநிலைப் பரீட்சை – 2012 ஜனவரி**

**வியாபாரச் சட்டம்**

Business Law

(56) வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தின் பகுதி

29-01-2012
மாலை
[2.00 – 3.30]

பக்கங்களின் எண்ணிக்கை: 02

**நேரம்: 01 மணித்தியாலம் 30 நிமிடங்கள்**

வினாக்களின் எண்ணிக்கை: 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்:**

*(1) இது வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தின் "**வியாபாரச் சட்டம்**" பகுதியாகும்.*

*(2) ஏதேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடை எழுதுக.*

*(3) விடைகள் யாவும் உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த ஒரே மொழியிலேயே எழுதப்படல் வேண்டும்.*

*(4) வியாபாரச் சட்டமும் முகாமையியலும் பாடத்தில் பரீட்சார்த்தி ஒருவர் சித்தியடைவதற்கு வியாபாரச் சட்டம் மற்றும் முகாமையியல் ஆகிய ஒவ்வொரு பகுதியிலும் நிலைக்கு ஏற்ப குறைந்த பட்சம் 40% அல்லது 50% புள்ளிகளைப் பெறல் வேண்டும்.*

*(5) மொத்தம் 50 புள்ளிகள்*

---

**01.** (a) தொழிற்சங்கமொன்றை உருவாக்கிட உரித்து அல்லாத அலுவலர்களின் வகைகள் இரண்டினை (02) க் குறிப்பிடுக.

(b) பிறழ்கூற்றினை (misrepresentation) முன்வைத்ததற்கு எதிராக (actionable) நடவடிக்கை எடுக்க இடமளிக்கும் இரண்டு (02) தேவைப்பாடுகளைக் குறிப்பிடுக.

(c) வர்த்தக மேல்நீதிமன்றம் தனது நியாயாதிக்கத்தை உபயோகிப்பது தொடர்பான இரண்டு (02) விடயங்களைக் குறிப்பிடுக.

(d) வழக்கமொன்றை ஒரு சட்டமாக அடையாளப்படுத்துவதற்கு திருப்திப்படுத்த வேண்டிய தேவைப்பாடுகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

(e) நீதிமுறை முன் தீர்ப்புகளின் கோட்பாடுகளை (doctrine of judicial precedents) பிரயோகிப்பதற்கு திருப்திப்படுத்த வேண்டிய காரணிகள் இரண்டினைக் (02) குறிப்பிடுக.

(ஒவ்வொன்றுக்கும் 02 புள்ளிகள் வீதம், மொத்தம் 10 புள்ளிகள்)

**02.** **X** என்பவர் **ABC** கம்பனியின் ஒரு ஊழியர். துர்நடத்தையின் பொய்க்குற்றச்சாட்டுகள் மீது அவரை கம்பனி சேவையிலிருந்து பணி நீக்கம் செய்தது. அத்தோடு கம்பனியானது நிதியத்திற்கு EPF உதவுதொகைக் கொடுப்பனவைச் செலுத்தவும் தவறியது.

பின்வரும் விடயங்களில் அவருக்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள சட்டரீதியான பரிகாரங்கள் மற்றும் நிவாரணம் தொடர்பாக **X** இற்கு ஆலோசனை கூறுக.

(a) துர்நடத்தையின் பொய்க்குற்றச்சாட்டுகள் மீது சேவைகளிலிருந்து பணிநீக்கம்.
(05 புள்ளிகள்)

(b) கம்பனியினால் EPF உதவுதொகையின் கொடுப்பனவு செலுத்தப்படாமை(Non-payment of EPF contribution by the company). (05 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

**03.** (a) ஒப்பந்தச் சட்டத்தின் கீழுள்ள (under the Law of Contract) ஒரு பிணைக்கும் ஒப்பந்தத்தின் (binding contract) அத்தியாவசிய மூலங்கள் எவை ? (05 புள்ளிகள்)

(b) ஒரு ஒப்பந்தம் விடுவிக்கப்படக்கூடிய பிரதான வழிகள் எவை ? (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**04.** "முகவர்ச் சட்டமானது (law of Agency) குறிப்பிட்ட கடமைகளை முகவர் மற்றும் முதல்வர் ஆகிய இருவர் மீதும் சுமத்துகிறது."

முகவர் மற்றும் முதல்வர் ஆகியோரின் கடமைகளை ஆராய்க. (10 புள்ளிகள்)

**05.** (a) **A** என்பவர் காசோலை ஒன்றை வெறிதாக (blank) வரைந்து "கைமாறத்தகாதது" எனக் குறுக்குக்கோடு இடுகிறார். பின்பு தனது எழுதுவினைஞரிடம் மாதாந்த அலுவலக வாடகையைக் கொடுப்பனவு செய்திட தொகையையும் கொடுக்கப்பெறுநரின் பெயரையும் நிரப்புவதற்காகக் கையளிக்கிறார். எழுதுவினைஞர் காசோலையை நிரப்பி எழுதுவினைஞரால் பெறப்பட்ட கடன் ஒன்றினைத் தீர்த்திட **B** என்பவருக்கு கொடுக்கிறார். **A** இற்கு இது தெரியவந்தவுடன் அவர் காசோலையின் கொடுப்பனவை நிறுத்துகிறார்.

காசோலைமீது **A** இன் பொறுப்பினை ஆராய்க. (06 புள்ளிகள்)

(b) காசோலை "பெறுநர் கணக்கிற்கு மட்டும்" என்று குறுக்குக் கோடிடப்பட்டிருக்கும் பொழுது வங்கியொன்றின் கடப்பாடுகளை (obligations) விளக்குக. (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

**06.** "வாங்குவோன், ஒப்பந்தத்தை மீறியபோது பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் (sale of Goods Ordinance) விலை தீர்க்கப்படாத விற்போனுக்கு கிடைக்கத்தக்க ஒரு பரிகாரமாக பாத்தியதை உரிமை (right of lien) உள்ளது".

(i) விலை தீர்க்கப்படாத விற்பனையாளன் எந்தச் சூழ்நிலைகளின்கீழ் பாத்தியதை உரிமையைப் பயன்படுத்த உரித்துடையவன் (entitled) என்பதை விளக்குக.

(05 புள்ளிகள்)

(ii) எப்போது இவ்வுரிமையைப் பயன்படுத்த விலை தீர்க்கப்படாத விற்போனுக்கு உரித்து கிடையாது என்பதை விளக்குக.

(05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

- o0o -